(குறுக்கீடுகள்) தற்போது நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தனியாகவும் பதில் அனுப்பிவிட்டேன், இப்போதும் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது இதுபற்றிப் பேசலாம். தற்போது தனியாகப் பேசுவதற்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் அவசரப் பொது முக்கியத்துவம் இல்லை. மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் மனித நேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநீதியை வென்று நீதியை நிலைநாட்டிய எங்கள் நீதி தேவதையே! தமிழக மக்களுக்கு நாடு போற்றும் நான்காண்டு சாதனைத் திட்டங்களைத் தந்த சாதனைத் தலைவியே! தமிழகத்தின் தீய சக்திகளை ஒழிக்கப் பிறந்த மகா சக்தியே! தமிழக மக்களின் அன்புத் தாயே! எங்களை வாழவைக்க இறைவன் தந்த இதய தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 142 முதல் 157

2015 ஆகஸ்ட் 25] [திரு. ஏ.கே. போஸ்]

வரையிலான பதினாறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

6. கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

2015–2016 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1.	மாநிலச் சட்டமன்றம்	24,48,08	—	1
2.	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	20,97,80	—	—
3.	நீதி நிருவாகம்	408,62,57	—	—
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	1,140,58,62	120,66,81	1
5.	வேளாண்மைத் துறை	3,685,19,73	192,71,04	90,30,00
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	627,42,27	31,03,00	1